**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – தொழிற்கல்வி – தமிழ்நாட்டிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்க அரசாணை (நிலை) எண்.240, பள்ளிக் கல்வித்(விஇ)துறை, நாள்:18.08.2010-ல் ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்(விஇ)துறை**

**அரசாணை (1டி) எண்.366**
**நாள் 06.12.2010**
திருவள்ளுவராண்டு 2041
கார்த்திகை-20.

**படிக்கவும் :-**

அரசாணை (நிலை) எண்.240, பள்ளிக் கல்வித்(விஇ)துறை, நாள் 18.08.2010.

------

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட அரசாணைக்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

**திருத்தம் - I**

மேற்காணும் அரசாணையில் பத்தி 5-க்கு பின் கீழ்கண்டவாறு பத்திகள் சேர்க்கப்படுகிறது :-

“6. மேல்நிலைப் பள்ளிகளில் முறையான ஊதிய விகிதத்தில் பணிபுரியும் தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு உயர்கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வு குறித்த செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும் :-

அரசு பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு

2202 பொதுக் கல்வி 02 இடைநிலைக் கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் I திட்டத்தில் சேராதது AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கு சம்பளம் 01- சம்பளங்கள் (த.தொ.கு 2202-02-109-AA-0108)

7. மேலே குறிப்பிடப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதி 2010-11ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்க்கப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி, செலவினை மேற்கொள்ள பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. 2010-11-ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கம் பெற ஏதுவாக உரிய கருத்துருவை நிதி(கல்வி-II)துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

## திருத்தம் - II

மேற்காணும் அரசாணையின் பத்தி 6-ஐ பத்தி 9-ஆக வரிசைப்படுத்தப்பட்டு கீழ்கண்ட பத்தியாக மாற்றியமைக்கப்படுகிறது.

2) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.66/DS(K)Edn/2010 நாள் 25.11.2010ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1395 (ஆயிரத்து முன்னூற்று தொன்னூற்று ஐந்து)

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்
அரசு முதன்மைச் செயலாளர் (பொறுப்பு).

**பெறுநர்**
பள்ளிக் கல்வி இயக்குநர்,
மற்றும் அனைத்து துறைத் தலைவர்கள்,
சென்னை - 6.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
(பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை- 1 / 5 / 35 / 108.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து கருவூலக் கணக்கு அலுவலர்கள்.
அரசு உயர்நீதிமன்ற சிறப்பு வழக்கறிஞர், (கல்வி)
சென்னை உயர்நீதி மன்றம், சென்னை — 104.

**நகல்**
நிதித் (கல்வி-II)/வ.செ.பொது-II) துறை, சென்னை-9.
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
இணையதளம்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.